உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பசுவந்தவிண

வெண்பாவந்தாதி,

திரு ஊஞ்சல்.

இது,

ஸ்ரீ வன்றொண்டரவர்களின்

மாணாக்கருள் ஒருவரும்,

காரைக்குடி

ராம. கு. ராமநாதச்செட்டியார்

குமாரருமாகிய

சொக்கலிங்கச்செட்டியார்

இயற்றியது.

சென்னை:

பிரஸிடென்ஸீ அச்சுக்கூட[illegible]

அச்சிடப்பெற்ற[illegible]

விஸ்வாவசு௵ பு[illegible]

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
20 OCT 1905
MADRAS.

54
4 1905

O31,12x
N05
222806

உ

சிவமயம்.

பசுவந்தவனை

வெண்பாவந்தாதி.

காப்பு.

பொன்னுலக முன்னுலகம் போற்றுபசு வந்தனையா
நன்னகரா னந்தவல்லி நாயகற்குப்—பன்னுவெண்பா
வந்தாதி பாட வருளு மொருகோட்டுத்
தந்தா வளத்தினிரு தாள்.

நூல்.

திருமார்பன் வேதந் திகழ்வாயன் றேவர்
பெருமான் முதலிமையோர் பேணி—யொருவாத்
தவமுனிவோர் சூழ்ந்திறைஞ்சத் தண்பசுந்தை மேவுஞ்
சிவனடியே போற்றுகநெஞ் சே. (க)

சேவேறு தேவனே செஞ்சடையாய் நஞ்சடையு
மாவேறு கண்டா மலர்க்கண்டா—சோவேறு
புன்னகையாய் தென்பசுந்தைப் பூரணநா லாரணவிற்
கன்னகையா பொன்னிகரங் கா. (உ)

கானமர்பூங் கொன்றைசடைக் கானமர்செம் மேனியசெந்
தேனமர்பூஞ் சோலைதிகழ் தென்பசுந்தை—வானவமுக்
கண்ணுவான் போற்றுமணி கண்டா கடையேனை
யெண்ணுவா னிற்றுதித்தற் கே. (௩)

ஏதமே செய்தே னிவையெனநாக் கூசுமந்தோ
போதமே லொன்றுமிலாப் பூரியன்யா—ஞாதனே
யானந்த வல்லியிடத் தார்பசுந்தை யண்ணலோ
வீனந்த விர்த்தா ளெனை. (௪)

என்னுளைக்கேன் யாவு மிருந்தாங் குணர்முதல்வா
பொன்னுளைக்கொள் வேணிப் புனிதனே—நின்னிடத்தே
ஓர்த்தி யுணர்த்தி யருள்கெனுந்தோ மும்பசுந்தைத்
தீர்த்தனை தீர்த்தருணீ செய். (௫)

செய்ய சடையானே செம்பவள மேனியனே
வையமரு [illegible]ானந்த வல்லியிடத்—தையனே
யேதுறுமோ வென்றுகவன் றேக்கத்தா னேழைமையா
ஞேதுததி கொள்வா யவந்து. (௬)

உவகைமிகப் பாலூட் டுறுகியம மன்னைக்
கவிர்தொழிலே னும்பசுந்தை யண்ணல்—சவலை
மழுவுக் கழலு மரபாமவ் வாறே
விழைவுற்*றென் பாட்டினையு மேவு. (௭)

---

* விழைவுற்றவென்னும் பெயரெச்சத்தகரந்தொக்கது.

மேவலர்தம் பான்முனிவான் வேறறவன் பாலேத்து
மாவலர்தம் பாலருளா லார்த்தியின்ப—மாவரிமுன்
வண்பதுமம் வாடன் மலர்த லுறல்போல
வொண்பசுந்தை யான்முன் னுறும். (௮)

உறவு முறுதுணையு மோகைசெய்தாய் தந்தை
யறமும் பொருளின்பம் யாவும்—பிறவுமெலாம்
பண்பிசைந்த சான்றோர் பணிந்திறைஞ்ச வின்பருளுந்
தண்பசுந்தைச் சம்புவிரு தாள். (௯)

தாழ்ந்திலே னன்பொடுநின் றாளிற் றிருக்கோயில்
சூழ்ந்திலே னவாற் றுதித்திலேன்—போழ்ந்தமதிக்
கோடீரத் தானேயென் கோடீரத் தென்பசுந்தை
யாடீரத் தானே யருள். (௧௦)

அருளா வுருவா யருவுருவாய் வேதப்
பொருளாய்மெய்ப் போதமாய்ப் போதத்—தெருளாய்ச்
சுயமே யொளிருஞ் சுடராய் மருவும்
வயமார் பசுந்தையிலெம் மான். (௧௧)

மாலார் பிறந்தையெனும் வாரியினாழ்ந் தாயிழையார்
சேலார் விழிவலையிற் சிக்கியே—நூலோது
நன்னெறிச்செல் லாதுலைந்தே னாதனே தென்பசுந்தை
மன்னுமிறை வாவருளு வாய். (௧௨)

வாயுனையே வாழ்த்த மனமுனையே சிந்திப்ப
வேயுந் தலைதா னிறைஞ்சவே—நீயுயிர்கட்

கேதுணை ராமலந்தோ வேந்திழையார் பாற்பசுந்தை
யாதியனே சாரு மவை. (கங)

அவைநிறைந்த கூத்தா வருட்பசுந்தை நாதா
சிவையிடத்தின் மேவிமகிழ் தேவா—நவைநெறியிற்
போதலே யுண்ணமுதாம் புன்மையேற் குன்றுதிநின்
றோதலே நஞ்சாமந் தோ. (கச)

அந்தோநாநா னென்செய்கே னண்ணால் விடமிமையோர்
வந்தோ விடக்கொண் மணிகண்டா—முந்தாருஞ்
செய்யாத தீமையெலாஞ் செய்புலையேன் றென்பசுந்தை
யையாநா னுய்வதெந்நா ளாம். (கரு)

ஆமோ வெனக்கு னருளென்று நைந்துமனம்
வேமோர்கா லவ்வுணர்வை வேல்விழியார்—தீமோக
மாவா மறைப்ப வயர்ந்ததுவா கின்றேன்மா
தேவா பசுந்தையமு தே. (கசு)

அமுதா யமுதி னருஞ்சுவையா யன்பர்
சமுதாய முண்ணத் தருவோய்—குமுதவாய்
வெற்பரையன் பொற்பாவை மேவும் பசுந்தைநக
ரிற்பரனே யற்புதவெற் கே. (கஎ)

கேதமிக வாமென்ப கேட்டிருந்து மந்தோபுன்
மாதர்முலைக் குன்றேறி மாழ்கின்றே—னாதனே
தென்பசுந்தை வாழு சிவனே சிவைபாகா
வென்புகுமோ நாயேற் கினி. (கஅ)

இனியோர் புகலுண்டென் றெண்ணுகிற்பே னல்லேன்
றனியே பசுவந் தனைமா—முனியே
முனியேலென் றீமை முனியேழை யந்தோ
பனியேய் மலைமகளன் பா. (௧௯)

பாவானின் பாதம் பரவுந் தரமறியேன்
பாவாணர் போற்றும் படிவினவி—நாவற்
றுதிபோலத் தென்பசுந்தைத் தாயோனே நாயேன்
மதிபோன வாபோற்று வல். (௨௦)

வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனனின்பா
லல்லான்மற் றியார்பாலா மண்ணலே—வில்லாருந்
தென்பசுந்தை வாழ்வே சிறுமுனிவற் கொட்டாண்
டென்பதன்று மாற்றினை நீயே. (௨௧)

ஏனோ வுணரா தெரிநரகிற் சீவர்பலர்
தானேவீழ்ந் தெய்க்கின்றார் தானுவே—வானோர்கள்
போற்றும் பசுந்தைப் புராந்தகா நீயெவர்க்கு
மாற்றும் மருள்பொதுவா னால். (௨௨)

*ஆவிபொது வேனு முடமானோர் துணையின்றி
மேவியுண மாட்டா விதமேபோ—லீவிழைந்தெற்
கூட்டினா லன்றி யுணும்வலியில் லேன்பசுந்தை
நாட்டினா யாரருணீ நல்கு. (௨௩)

* ஆவி - ஈண்டுவாவி.

நவையென் பனவெல்லா நாடிச்செய் தீயேன்
சிவையன்பின் வாழிடத்தாய் தேவே—யவையின்க
ணின்றுடி தென்பசுந்தை நேசா கயிலேசா
வென்று தரிப்பா யெனை. (௨௪)

எனைநீ யுணர்த்தினால் யானுணர்வே னன்றி
நினையா னுணரு நிலையே—தனையே
பசுவந் தனையாள் பரமா திரமா
விசுவந் தனையார்வாழ் வே. (௨௫)

வேயனைய தோளார் விழிவலையி லார்த்தாசைப்
பாய கடற்குட் படுத்திமுலை—யாயமலை
யாலமுத்த னைந்தாங் கலைந்தே னருள்பசுந்தைச்
சூலயிற்கை யாய்தாட் டுணை. (௨௬)

துணையாவைந் தக்கரமே சொல்லுமா சொல்லி
பிணையாருங் கண்டிகைநீ றென்று—மணிவார்தம்
பாதமுடிக் கொண்டோரே பண்பார் பசுந்தைமுக்க
ணாதியடிக் கீழின்பத் தார். (௨௭)

ஆரோ வினைதபுத்தெ மார்க்கியறத் தென்பசுந்தைப்
போரேற்றான் றாளிற் புணர்ப்பனோ—வூரூர்தோ
றோடியுண ராதந்தோ வொண்டொடியார் தொண்டொடியாய்
நேடியிளைத் தாய்மனமே நீ. (௨௮)

நீகேண் மடநெஞ்சே நிச்சயமின் னார்திறத்திற்
போகே லிடர்முழுதும் பூட்டுமது—பாகே

மலைமொழியா னந்தவல்லி வாமன் பசுந்தைத்
தலைவனடி யார்திறமே சார். (உ௯)

சார்ந்தார் பவந்தொலைக்குந் தண்பதுமத் தாணிழற்கீ
ழார்ந்தேயு மின்பமய மாக்குமதி—சேர்ந்தாருஞ்
செஞ்சடையான் றென்பசுந்தைத் தேவனென்றோர்ந் தாயநெறி
நெஞ்சடையா யாதுன் னிலை. (௩0)

நிலையாயுன் சேவடியி னெஞ்சமுந்தா தந்தோ
வலையாரு மோதியர்தொண் டாற்றி—யுலைவாகி
யென்னாளு மோடி யினைதலழ கோபசுந்தை
யென்னுதா கின்னடிமை யான். (௩க)

யாவையுநின் ஞணையன்றி யாதுஞ் சலியாவென்
றேவறமெய்ந் நூலோது மொண்பசுந்தை—மேவரனே
முக்கண்ணு மொய்குழலார் முன்மருவா தென்மனநின்
பக்கமுறச் செய்யாய் பரிந்து. (௩உ)

பரிவேதம் மாருருவாம் பாங்குடையார் கர்ண்பார்
பரிவேத மாவூர் பரனை—யரிவேத
ஞதியருங் காணு ஏருட்பசுந்தை யானை நெஞ்சே
நீதியிதை யோர்ந்துணர்வாய் நீ. (௩௩)

நீயே தவமுடையை நீயே யருளுடையை
நீயேமெய்ஞ் ஞான நிறைவுடையை—நீயேபே
ரின்புடையை போற்று மெழிற்பசுந்தை யான்றனை
யன்புடையை போற்றுவையா னல். (௩௪)

ஆனார் கொடியா யருளுருவோர் பாற்கொடியாய்
மானார் கரத்தாய் மலர்கரத்தாய்—வானோர்க
ளாற்றும் பணியா யணியும் பணியாய்நீ
போற்றும் பசுந்தை புரம். (௧௫)

புரமூன் றெரித்தாய்முன் புன்னகையாற் காமன்
புரமூன்று பார்வையாற் போக்கும்—பரமூன்று
மாமலமும் வீட்டும் வகைபசுந்தை நாதாகை
யாமலகம் போற்றேற்று வாய். (௧௬)

ஆயே யெனையுணர்த்து மத்தனே தென்பசுந்தை
வாயே யனவரத மன்னிவாழ்—தூயோனே
முக்கணக்க வக்கணாக்கொண் முத்தகித்த பெத்தமுத்தி
யக்கணக்கெ னெற்குணர்த்தி யாள். (௧௭)

ஆளும் பதமெனக்கின் றுயினுநின் னாருட்கெந்
நாளும் பதம்பசுந்தை நாதாவெண்—டோளு
மதிமுடியு மசமிடறும் வார்கழலுங் காட்டி
யெதிருறுவாய் தேகாந்தத் தில். (௧௮)

இல்லா விடையா ரிடைமயக்குற் றெந்நாளு
நல்லானே நானுலைதன் ஞாயமோ—வல்லானே
ரொன்றுடையாய் நின்றுடையா தோதுபுலிப் பாதர்பணி
மன்றுடையாய் நன்றருளு வாய். (௧௯)

வாயே மனமே வபுவேயென் றிம்மூன்றெந்
தாயே நினதிடையே சார்ந்துநிற்ப—நாயேற்

கிருவினையொப் பாக விருண்மலவீ றேக
வருள்பசுந்தை வாழ்வேய ரா. (௪௰)

அரனே யமுதே யழகா குழகா
வரனே பசுந்தை வரதா—பரனே
யுரகா வரணு வுமைமா திடையே
விரகா வரணு விழை. (௪௧)

விழைவா யரனே விழைந்தா லடியே
னழகா வுனதா ளயமோ—னெழிலார்
வடவா லிடையார் மௌனு பசுந்தை
யிடமா யமர்வா யெனை. (௪௨)

எனைத்துயருந் தீர்த்தா ளெழிற்பசுந்தை நாதா
னினைத்துதிக்க நானுணரா நீசன்—பினைத்துதிக்கப்
பண்ணுவதுன் பாரமே பாவியேற் கின்பருள
வெண்ணுவது முன்பார மே. (௪௩)

ஏதந் தருபவத்துற் றெய்த்தே னெறாழ்மறலி
தீதந் தெனையலைப்பச் சேர்ந்திடும்ப்—போதந்தோ
வென்செய்கேன் றென்பசுந்தை யீசா கயிலேசா
தஞ்செனக்கா ரஞ்சலெனச் சார். (௪௪)

சாரங்க வம்பகத்தார் சைலமக ளாரொருபாற்
சாரங்க வம்பகத்தார் தண்பதுமன்—சாரங்கச்
செங்கரனோர் காணுச் சிலம்படியாய் தென்பசுந்தைச்
சங்கரனே நின்ருள் சரண். (௪௫)

சரவணத்தன் காழிவரு சம்பந்தன் றுதை
யரவணத்தன் மேனிக் கணியாச்—சிரவணத்த
நான்மறையோர் வாழ்பசுந்தை நாதன் பதமனமுன்
பான்மறையா தாரும்வகை பார். (௪௬)

பார்த்திலையந் தோவுற்றுப் பாழ்மனமே யெங்குறுகிற்
கோர்த்தவளஞ் சால்பசுந்தை யீசனன்று—ளோர்த்துணர்மெய்ஞ்
ஞானமய வாகீசர் நன்முடியி னல்லூரிற்
றுணருளிச் சூட்டுமலர்த் தாள். (௪௭)

தாழ்மதிசீ தென்பசுந்தைச் சங்கரனைத் தற்பரனைப்
போழ்மதியார் வேணியனைப் பூணியனைப்—பாழ்மதிசே
ராதனையு மாட்கொணம்பி யாரூரற் கன்றுசென்ற
தூதனைநெஞ் சேயெப்போ தும். (௪௮)

துங்கமறை வேதியனைத் தூயதிரு வாசகத்தை
யங்கணுகி வாதபுரி யண்ணல்பாற்—செங்கரங்கள்
சேப்பவெழு-தும்பசுந்தைச் சிற்பரன்று ளேநம்மைக்
காப்பதலா லுண்டோ கதி. (௪௯)

கதிர்முடிவேந் தெண்கண்ணன் கண்ணனிவர் தாம்வாழ்
பதிமுழுதாண் டின்பம் பருகி—யதிலுவர்ப்புற்
றீசனையத் தானவனே யாதிநெஞ்சே தென்பசுந்தை
யீசனையே பேசினையா யில், (௫௦)

இல்லாளாய்ப் பாணமா யேறுமாய் நிற்கியைந்த
நல்லானே மால்பசுந்தை நாதனே—யெல்லாமாய்

222808

நின்று பவற்கொளித்து நேடியலை வானின்று
மென்று லெமர்கதிமற் றென். (௫௧)

என்னு யகனே யெனையருளா னந்தவல்லி
தன்னு யகனே தருமிமையோர்—நன்னு
யகனே பசுந்தை யமுதே நுதலம்
பகனே யருணோக்கம் பண். (௫௨)

பண்ணமரும் வேதம் பயில்வாயான் றென்பசுந்தை
யண்ணலருள் பெற்று ரடியார்க்கு—விண்ணமரு
மாலம் புயனெடுமால் வாழ்பதமெல் லாஞ்சிறுகாற்
காலுந் திரும்பைதிக ராம். (௫௩)

ஆகும் பொருள்பசுந்தை யம்மான்றன் மற்றெல்லா
மேகும் பொருளென் றினிதுணர்வி—வேக
மவனடியார்ச் சார்ந்தே யவரேவல் செய்யு
மவரிடையல் லாலெவர்பா லாம். (௫௪)

ஆனே றுடையா யருளுருவி லாசையெட்டுந்
தானே றுடையாய் சடையானே—வானேறும்
பைம்பொழிறே னூற்றும் பசுவந் தைநகரத்
தெம்பெருமா னம்பநின்று ளே. (௫௫)

ஏதப் பவக்கடல்வீழ்ந் திச்சையெனு முட்சுறவ
மோதத் திரைமாதர் முன்வமிழ்த்த—மாதத்தி
லுற்றேற்கிப் போதே யொளிர்பசுந்தை யெம்மானே
சற்றேனு நின்னருளைத் தா. (௫௬)

தான நிறைபொறைமை சான்றாண்மை சத்தியமுன்
னானவெலாந் தென்பசுந்தை யம்மானே—நீநவிலு
மாரருளா லாமென் றருமறைமுன் னோதவுமென்
றேரகிலார் மூடர் சிலர். (௫௭)

சில்லரிக்கட் டேமொழிப்பூந் தேங்கோதைப் பூங்கொங்கை
வல்லமைத்தோ ளானந்த வல்லியிடம்—புல்லவமர்
தென்பசுந்தை நாதா சிறியேற்குன் றாளன்றி
யென்புகன்முற் றோர்ந்தா யிசை. (௫௮)

இசையுலகெ லாஞ்சூ ழெழிற்பசுந்தை நாதா
நசைமுனிவொன் றில்லாத நம்பா—மிசைவிண் மதிப்
பிஞ்சக் கரவுடையாய் பேதையேன் மேதையுற
நெஞ்சக் கரவுடையாய் நீ. (௫௯)

நீயேயெல் லாமாகி நின்றா யெனையளித்த
தாயே பசுவந் தனையமருந்—தூயோனே
யொன்றுநீ யல்லையுனை யன்றியிலை யொன்றுமெனி
னன்றுணர்வ தெவ்வாறு நான். (௬௦)

நானே லடியவனென் னாயனீ யீதுண்மை
மானேய் கரத்தபசு வந்தனையெம்—மானே
மருள்புரிவா யில்புகுந்து மாழாதுன் றாளே
யருள்புரிவா யீதென் னவா. (௬௧)

அவனே யவளதுவென் றாமுணர்வு நீத்தெம்
பவனே யெமையாள் பசுந்தைச்—சிவனே

பரமா சிவோகமா பாவனையுந் தென்னுந்
திரமாகும் பேறருளிச் செய். (௬௨)

செய்யனே பொன்மேனிச் செல்வனே யென்னுரிமை
யையனே தென்பசுந்தை யண்ணலே—பொய்யனேன்
பொய்மாதர் வாஞ்சைப் புணைநெறிச்செல் லாதருணி
செய்மாதர்ச் சைவச் செலவு. (௬௩)

செல்லார் பொழிற்பசுந்தைச் செஞ்சடையா னெல்லாமும்
வல்லா னுமையாளு மாதேவன்—புல்லா
ரரணங்கண் மூன்றெரித்த வண்ணலு ளன்றி
யரணம்வே றுண்டோ வறை. (௬௪)

அறையுண்டு மொத்துண் டவாசித் திசையான்
கறையுண்ட வேலாற் கவலேல்—பிறையுண்ட
வேணியான் பாதமே மென்மலரா லர்ச்சிப்பாய்
பாணியாய் நெஞ்சே பணி. (௬௫)

பணிகொண்ட வேணிப் பசுவந் தனையான்
பணிகொண்ட சென்னியராய்ப் பாரிற்—கணிகொண்ட
மெய்யடியா ரேவறும் வேண்டுவநெஞ் சேதன்பால்
வையடியா ரின்பும் வரும். (௬௬)

வரைவில்லான் றென்பசுந்தை வாணனடி யார்க்கு
வரைவில்லா தீயும் வரத—னரைவில்லா
ரேறுடையான் சேகரமே லிந்துடையான் சேவடியே
தேறுடையா ரெம்முடைய தே. (௬௭)

தேவனே தென்பசுந்தைச் செல்வனே நால்வருட்
பாவனே யாதிப் பழமறைசொ—னாவனே
மாதேவா வானந்த வல்லிபங்கா வென்றுநெஞ்சே
போதோவா தென்றும் புகல். (௬௮)

புகலாநின் றாளே புகுந்தடியே னென்று
மகலா தடைந்தே னரனே—மிகலாருந்
தென்பசுந்தை வாணா திருவுளமீ தென்றறியே
னென்பெறினு நின்கருணை யே. (௬௯)

ஏவந் தழலு மிரதமசை வில்லதனைச்
சாவங்கன் மேற்கிழக்கிற் றுன்மாறிப்—போவதரு
டென்பசுந்தை வாணா திரிபுரத்தை நீதுணையா
யென்பொருந்த வென்ற யிசை. (௭௦)

இசையார் பசுந்தையம ரெம்மானே வானோர்
நசையார வந்திறைஞ்சு நாதா—மிசையாருந்
தண்மதியாய் நாயேனைச் சார்மலத்தி னூற்றமனைத்
தண்மதியா னிற்றொழுவே தா. (௭௧)

தானேவந் தென்னைநீ தாங்கினா லல்லாலெம்
மானேயான் போதும் வலியில்லேன்—றேனேயும்
பூம்பொழில்சூழ் தென்பசுந்தைப் புண்ணியா கண்ணியா
வோம்புமதி வேணியெந்தா யோ. (௭௨)

ஓதியா யோதி யுணர்பொருளா யுய்த்துணரு
நீதியாய்க் காண்பானாய் நேரிலருஞ்—சோதியா

பின்னும் பரவெளியா யேய்ந்து மெமக்கிரங்கி
மன்னும் பசுந்தையிலெம் மான். (எங)

மானே விழிகண் மடமயிலே சாயனறுந்
தேனே மொழியென்று சேயிழையார்—பானுரு
மோடுமட நெஞ்சே யொருகணமே னும்பசுந்தை
யாடுமிறை பாதநினை யாய். (எச)

ஆயிழையார் தம்பா லடைவே யருஞ்சுகமென்
றேய்வறநீ யென்று முலைந்தாயே—பேய்மனமே
துன்பல்லா லின்பெட் டுணையளவுங் கண்டாயோ
தென்பசுந்தை யான்றாளே சேர். (எரு)

சேரார் புரத்தைச் சிரித்தெரித்த தேவேசன்
பாராய்நஞ் சஞ்சிதத்தைப் பார்த்தெரிப்பான்—கூரா
திருவினைமா மாயை யிருளும் பசுந்தை
யொருவனையே நெஞ்சன்பா லான்று. (எசு)

ஊனந் தவிர்த்தே யுதவுநித்தி யானந்த
மானந்த வல்லியிடத் தண்ணலவன்—றானந்த
மத்தியமுன் னில்லான் வரதன் பசுந்தையர
னித்தியமு நெஞ்சே நினை. (எஎ)

நினையா னறவுணர்த்தி நின்றா னிழல்சேர்த்
தெனையாள் பசுந்தைநக ரெந்தா—யனையாக
வானந் தர்ணியர மற்றெல்லாந் தந்தருளு
மானந்த வல்லியா கா. (எஅ)

பாகனே வேதப் பரியூருந் தென்பசுந்தை
யேகனே வேணி யிடைநான்கு—மேகனே
நீல மணிமிடற்றாய் நின்மலா வென்மனந்தான்
சாலவுனை யுன்னுநெறி தா. (எகூ)

தாரணியெ லாஞ்சூழுந் தண்பசுந்தை யாயிதழித்
தாரணியுஞ் செஞ்சடையாய் தாணுவே—நாரணியும்
பூமாலை வாகா பொருந்த வருணினக்கே
பாமாலை சூட்டும் பணி. (அ0)

பணிகொண் டெனையாள் பசுவந் தனையான்
பணிகொண்ட வேணிப் பரமன்—மணிகொண்ட
கண்டத்தா னண்டத்தார் காதரந்தீர்த் தாதரித்தான்
வண்டூத்தா ரார்பதமே வாழ்த்து. (அக)

வாழ்வாரு மெவ்வுலகும் வந்திப்பக் கைவிரித்துத்
தாழ்வாருந் தென்பசுந்தைச் சங்கரனைப்—போழ்வானத்
திந்தமரும் வேணியனை யெம்மானை யீசனைவாழ்த்
தந்தமுள்ளா ரேத்தா தவர். (அஉ)

அவமாக நாள்கழித்தே னந்தோவம் மட்டோ
வெவமே பலபுரிந்தே னேழை—சிவனே
பசுந்தையாய் மற்றெனக்கோர் பற்றிலே னுள்ளங்
கசிந்தையா நீசெயருட் கண். (அங)

கண்ணார் நுதலோய் கனமாருங் கண்டத்தோய்
பண்ணாரும் வேதப் பசுந்தையோய்—தண்ணார்

கடியேற்குஞ் சம்மியா கம்மேற்கும் மேவணி
யடியேற்குன் றாளே யரண். (அச)

அரணமோர் மூன்று மசித்து நசித்துஞ்
சரணளித்தம் மூவரையுந் தாங்கிப்—புரண
வருட்டிறந்தேற் றும்பசுந்தை யண்ணலார் தாளெம்
மருட்டிறநோய் மாற்று மருந்து. (அரு)

மருந்தாகி மந்திரமாய் மற்றவுமா யன்பர்
பெருந்தாபந் தீர்த்தருளும் பெம்மான்—விருந்தாக
விண்ணோ ரமுதுண்ண வேலைவிட மார்பசுந்தைக்
கண்ணுளன் றாளே கதி. (அசு)

கதியாவு முன்றன் கழலேயென் றோர்ந்தா
ரிதயாலை யத்தமரு மெந்தாய்—மதியாருஞ்
செஞ்சடையாய் தென்பசுந்தைத் தேவனே நின்றாளே
தஞ்சடைவா யென்றொருகாற் சாற்று. (அஎ)

சாற்றுகினும் வாவென்று சாராமற் றள்ளியெனைக்
கூற்றினுக்கா ளாகக் கொடுக்கினும்வெள்—ளேற்றவநீ
யாட்டுமா றன்றி யசைவுண்டோ தென்பசுந்தை
நாட்டநுத லானே நவில். (அஅ)

நவையே யெனக்குறவா ஞானம் பகையா
மெவமாருந் தீமைகண் மற்றெல்லா—நவமா
ரணிகலனுந் தென்பசுந்தை யண்ணலிக் கோட்டந்
தணிகலனு னுய்வதென்றே தான். (அகூ)

தானந் தவம்யோகஞ் சாந்தஞ் சிவதரும
ஞானந் தயையருண்மெய் நற்குணமுன்—னானவெலாந்
தென்பசுந்தை வாணன் றிருவடியிற் றாழ்ந்தேத்து
மன்பிசைந்தார்க் குள்பொருளே யாம். (௯௦)

ஆசையென்றாய் தந்தை யழுக்கா றறவுவஞ்ச
மோசமெலாந் தேர்பூர் முழுமூட—நேசனந்தோ
வைம்பா தகமகா ரண்ணாலோ தென்பசுந்தை
நம்பானே யுய்வதென்றோ நான். (௯௧)

நாரியர்மைத் தாரையினி னன்பிணியுற் றந்தோவப்
பாரியகொங் கைப்பொருப்பிற் பாய்ந்திடறி—வீரியம்போய்ப்
பாழ்ங்குழியில் வீழ்ந்தேன் பசுவந் தனையரனே
வாழ்ந்துயர வீடேற்று வாய். (௯௨)

வாயில் விடைய வழிபுகவென் மான்மனமங்
கோய்விலா தோட வுனைமறந்தேன்—பேயனேன்
றீயனேன் பேதையேன் செய்வதறி யேன்பசுந்தை
நாயனே நானுணர்வா னல்கு. (௯௩)

நல்லார் தொழும்பரனே நாதாமெய்ப் போதாவின்
செல்லார் பொழிற்பசுந்தைத் தேவேசா—வல்லார்
மிடறுடையாய் செஞ்சடையாய் வெள்விடையா யென்றுன்
பீடறுடையாய் நல்கா யருள். (௯௪

அருள்காட்டுங் கண்டி யரனே பதியாந்
தெருள்காட்டும் பூதி சிவமெய்ப்—பொருள்காட்டு

மைஞ்செழுத்தே சார்வா யடியோன் பசுந்தையோய்
நெஞ்சழுத்தி யுய்வா னினை. (௯௫)

நின்னையே போற்றுகிற்பார் நெஞ்சுகந்தோய் தென்பசுந்தை
யன்னையே யென்னையுணர்த் தையனே—மின்னையோர்
பால்வைத்தோய் மும்மலமும் பாற்றுதற்கென் சென்னியினின்
கால்வைத்த லென்றருளிக் காண். (௯௬)

காணார் பசுந்தை:யிலெங் கண்ணுதன்முன் பண்ணுதலைக்
காணார் தமக்குறுதி காணாரோ—காணாயென்
கன்னெஞ்சே வன்னஞ்சார் கண்டத்தான் றொண்டைத்தான்
முன்னஞ்சார் கின்னஞ்சா முன. (௯௭)

முன்னவனே தென்பசுந்தை முக்கண்ணா செக்கண்ணா
னென்னவனே யென்றிறைஞ்சு மெந்தைநின்சீர்—பன்னவனே
கந்நாவுங் காணவனே கங்கண்ணும் பெற்றாலு
மென்னார்வந் தானடங்கா தே. (௯௮)

தேயமெலாம் பாயபுகழ்த் தென்பசுந்தை வாயமரு
நாயகனை மாயவனை நான்முகனை—யேயிருபாற்
கொண்டவனை மிண்டகமே கோற்றொடியா னந்தவல்லி
வண்டவனைக் கண்டவணீ வாழ்த்து. (௯௯)

வாழ்த்துவதுன் மெய்ப்புகழே வந்திப்ப துன்பதமே
யாழ்த்துவதென் றீவினையே யாகவருள்—சூழ்த்து
மறியேற்குங் கையாய் வளர்பசுந்தை வாழ்வே
சிறியேற்கு ஞானத் திரு. (௧00)

வாழி.

கார்வாழி யந்தணர்யா கம்வாழி புரவலர்கோ
னோர்வாழி பிறங்குசைவ நெறிவாழி தென்பசுந்தை
யூர்வாழி கைலேச னுடங்கமரா னந்தவல்லி
பேர்வாழி நீறுமணி பேணடியார் குலம்வாழி.

முற்றிற்று.

உ

சிவமயம்.

பசுவந்தனை

திருவூசல்.

காப்பு.

மாமேவு மலரோதி மஞ்சார் வாவி
மல்குபசு வந்தனையூர் வயங்க வாழு
நாமேவு மானந்த வல்லி பாக
நயந்தமருங் கைலாய நாதர் மேவும்
பூமேவு திருவூச லாடற் போதம்
புணர்த்தளவிங் கொருதமியேன் புகன்ற பாடக்
காமேவு மொருகோட்டுக் கற்ப கத்தின்
கருணைபொழி தருமலர்த்தாள் காப்ப தாமே.

நூல்.

பூமேவு நால்வேதம் விட்ட மாகப்
பொருண்மேவு முபநிடதந் தாம்ப தாக
நாமேவு மாறங்கங் கால்க ளாக
நலமேவுஞ் சிவாகமஞ்சூழ் சட்ட மாகத்

தேமேவுஞ் சரியாதி பலகை யாகச்
சிவமேவும் பரஞானம் பீட மாகக்
காமேவும் பசுந்தையிலா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௧)

செம்பவளம் விட்டந்தூண் வயிரந் தாம்பு
செறிதரளஞ் சேர்பலகை திகழ்கோ மேத
மப்புருட ராகம்போ திகைகா னீல
மணிகொடுங்கை மரகதமே வால வாயம்
பம்பியொளிர் விடங்கமா ணிக்கந் தூபி
பயில்வையெண் டிக்குமொளி பரப்ப வாவிக்
கம்பிசைகூர் பசுந்தையிலா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௨)

முற்றுணர்வோன் றன்வயத்தன் வரம்பி லின்பன்
முதிர்ந்திடுபே ரருளாள னளவி லாற்றல்
பெற்றுடையா னியல்பானே பாச நீக்கப்
பெற்றியினான் றென்பசுந்தைப் பெருமா னென்றே
சொற்றிடுநான் மறைமுடிவை யுள்ள வாறே
துளக்கமற விளக்கமுறத் துணிந்து வாய்மை
கற்றுணர்வோர் தாம்புகலா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௩)

நாட்டுறுநித் தியவியா பகமுன் னைய
நலம்பெறினு மலம்புணர நாதி யாலே

வாட்டமுறீஇச் சார்ந்ததுவாய் மயங்கி னுய்நீ
மலமன்று சித்துருவாய் வயங்கு சீவன்
பூட்டுமுணர் வானமையோர்ந் தனது போதம்
பொன்றிடுமின் பொன்றுகெனப் புகன்று வாய்மை
காட்டுபசு வந்தனையா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௪)

அரியயன்மான் முதலிமையோர் செயமுன் சோத்த
மமர்ந்துபுவ னேசர்தி[illegible]ா டன்பி னேத்தப்
புரிபுவன மெலாஞ்சூழ்ந்து சென்னி தாழ்த்தப்
புரிதவயா முனிவர்குழா முன்னி வாழ்த்த
விருவருமின் னிசைபாட மகளி ராட
வின்னியமெண் டிசைமூட வின்பங் கூடக்
கருணைபொழி பசுந்தையிலா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௫)

பூதபதி பினாகிகா பாலி சூலி
புராந்தகன்மா தவநயனும் புயத்த பாதன்
மாநவன்மா கேச்சுரனு மாத வன்றன்
மாதேவன் மதிவேணி வாம தேவ
னாதிசிவன் விசுவேச னீல கண்ட
னரன்சம்பு சங்கரனென் றன்ப ரேத்திக்
காதன்மிகு பசுந்தையிலா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௬)

தடமேதி கடலார்வா னென்னப் போந்து
தானுழக்க மீனுகண்டு தாழை சாயப்
புடைமோதி முப்புடைக்காய் முதுகு றைப்பப்
போகட்டு வெருண்டோடப் புரிந்த தொன்றோ
விடியாதி யின்றிமுகின் மழையும் பெய்வித்
தின்பொடுவா ழகழிசூழ்ந் திலங்கு வான்சோ
கடியாரற் பசுந்தையிலா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (எ)

பொருவரிய நால்வேத சிவாக மங்கள்
புராணமிதி காசமுதற் புகலு மோதை
யரியதமிழ் மறைபோத மாதி யோதை
யாயிழையா ராடன்முழ வரங்கி னோதை
யிரதகய துரகாதி யியலு மோதை
யெழுகடலோ வெழுமுகிலோ வென்று வானோர்
கருதுபசு வந்தனையா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (அ)

தாத்துவிக மாதிதெரீஇத் தம்மை யோர்ந்து
தற்போதங் கழன்றொழியுந் ததிய ராய
மாத்தகுசீர் மகார்கடமை யருணீ ராட்டி
மலங்கழுவி நலங்கொளுவி மாறு தென்று
மார்த்திடுபே ரின்பாய தொட்டி லேற்றி
யாட்டியவர் தாமாம்வாழ் வளிக்கும் வாய்மை

காத்தருள்வான் பசுந்தையில... ந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௯)

தோமகலு மன்பொடுமுன் பிறைஞ்சி வேட்ட
தொண்டர்குழா மிண்டுபவத் துன்பை வீட்டத்
தாமரைமே லுமகண்முன் சுருதி கூட்ட
சதுமுகனின் னிசை வீணை நடவி மீட்டப்
பாமருமெய்ப் புலவர்களுந் துதிகள் காட்டப்
பரவுமனிக் கிதைமுத ...ர் பாடி யாட்டக்
காமர்பசு வந்தனையா னந்த ...ல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௧௦)

வேதசிவா கமங்களவற் றறங்கள் வாழ
விண்பெயலின் வண்பயன்மேன் மேலும் வாழப்
பூதிமுத லாஞ்சிவசா தனங்கள் வாழப்
பூண்டொழுகு மெய்யடியார் பொலிந்து வாழ
நீதிபசு வந்தனையூர் நிலவி வாழ
நிகேதனமீ தங்கமொடு நிரம்பி வாழக்
காதலருள் புரிந்திடுமா னந்த வல்லி
கைலாய நாதரோ யாடீ ரூசல். (௧௧)

முற்றிற்று.